Aparajitha

தளிர்த் திறன் திட்டம்

# வெற்றியின் விதைகள்

ஏப்ரல்
2017

22





| பொருள் | பக்கம் |
|---|---|
| வணக்கம்! | 2 |
| பதிவுகள் | 3 |
| சுவடுகள் | 6 |
| எதிரொலிகள் | 8 |


அபராஜிதா அறக்கட்டளை
5அ, வி.பி. இரத்தினசாமி சாலை
பீபிகுளம்
மதுரை 625 002
www.aparajitha.org
0452-4375252
info@aparajitha.org


செய்திமடல்
தனிச்சுற்றுக்கு மட்டும்

வாழ்க்கைத் திறன்களின் வழியாக நிலைமாற்றம்

# வணக்கம்!

"இனிப்பு என்றால் என்ன தெரியுமா?" என ஒருவர் இனிப்பைப் பற்றி மற்றவர்களுக்கு விளக்குவதைவிட, "இதனைச் சாப்பிட்டுப் பாருங்கள்" என இனிப்பைக் கொடுத்து உண்ணச் செய்தால், மற்றவர்களுக்கு இனிப்பு என்றால் என்னவென்று தெளிவாகப் புரிந்துவிடும். அதன் பின்னர் அவர்கள் தங்களுடைய அனுபவத்தைக் கூறி, இனிப்பு என்றால் என்னவென்று பிறருக்கு எளிதில் விளக்கிவிடுவார்கள் இல்லையா? இதனைப்போலத்தான், தளிர்த்திறன் திட்டத்தின் இந்தி வடிவமான டிம் டிம் தாரே கற்றுத்தரும் வாழ்க்கைத் திறன் என்றால் என்ன என்பதனைக் கேட்டு விளங்கிக்கொள்வதைவிட தனது பள்ளியில் கற்பித்துத் தெரிந்துகொண்டார் இராஜஸ்தான் மாநிலத்திலுள்ள பள்ளித் தலைமையாசிரியர் ஒருவர். பின்னர் இத்திட்டத்தை அம்மாநில அரசுக்கு அவர் பரிந்துரைத்தார். அம்முயற்சியைப் பாராட்டி அம்மாநில அரசு அவருக்குச் சான்றிதழ் வழங்கியிருக்கிறது. அதனைப் பற்றிய செய்திக்குறிப்பு சுவடுகள் பகுதியில் பதியப்பட்டுள்ளது.

இவரைப் போன்றே தளிர்த்திறன் திட்டம் (தமிழ்) / டிம் டிம் தாரா (குஜராத்தி) / டிம் டிம் தாரே (இந்தி) என்னும் இனிப்பை உண்ட தமிழகத்தைச் சேர்ந்த இரண்டு ஆசிரியர்களும் குஜராத்தைச் சேர்ந்த மூன்று ஆசிரியர்களும் இத்திட்டம் பற்றிய தம்முடைய கருத்துகளையும் தம் பள்ளிகளில் அதனால் விளைந்திருக்கும் மாற்றங்கள் பற்றியும் இவ்விதழின் பதிவுகள் பகுதியில் பதிந்திருக்கிறார்கள்.

படியுங்கள்! உங்களது எண்ணங்களைப் பகிருங்கள்!!

தொடர்ந்து உங்களின் ஆதரவையும் ஆலோசனையையும் எதிர்நோக்கும்,

*அரிஅரவேலன்*

*மேலாளர்*



*தளிர்த் திறன் திட்டமானது வாழ்க்கைத்திறன் கல்வியை ஒன்றாம் வகுப்பு முதல் பன்னிரண்டாம் வகுப்பு வரை பயிலும் மாணவர்களுக்கு வழங்குகிறது. உலக நலவாழ்வு அமைப்பு பட்டியலிட்டு உள்ள பத்து வாழ்க்கைத் திறன்களை அடிப்படையாகக்கொண்டு மகிழ்வுக்கல்வி வடிவில் உருவாக்கப்பட்ட பாடங்கள் தொடக்கப்பள்ளி வகுப்புகளுக்கு ஆசிரியர் கையேட்டின் வழியாகவும் நடுநிலை, உயர்நிலை, மேல்நிலை வகுப்புகளுக்கு காணொளி வழியாகவும் கற்பிக்கப்படுகின்றன. பொறுப்புடைய மாணவர்களை உருவாக்கும் நோக்குடைய இத்திட்டம் வெள்ளோட்டமாக 2008-09 ஆம் ஆண்டில் ஐந்து மேல்நிலைப் பள்ளிகளில் தொடக்கப்பட்டு, 2009-10 ஆம் ஆண்டில் தமிழ்நாடு பள்ளிக் கல்வித்துறையால் தமிழகத்தில் அரசு உயர்நிலை, மேல்நிலைப் பள்ளிகள் அனைத்திற்கும் விரிவாக்கப்பட்டது. பின்னர் விருப்பம் உள்ள தொடக்கப்பள்ளிகள், அரசு உதவிபெறும் பள்ளிகள், தனியார் பள்ளிகள் ஆகியவற்றில் இப்பாடங்கள் கற்பிக்கப்படுகின்றன. தற்பொழுது இத்திட்டம் தமிழ்நாடு, குஜராத், ராஜஸ்தான், மத்தியப் பிரதேசம், உத்தர பிரதேசம், பஞ்சாப், அரியானா ஆகிய ஏழு மாநிலங்களிலும் புதுச்சேரி ஒன்றியப் பரவிலும் செயலாக்கம் செய்யப்படுகிறது.*

# பதிவுகள்

## சிற்பிகளைச் செதுக்குவோம்!

அன்று கல்லை தமது ஆயுதமாகப் பயன்படுத்திய மனிதர்கள் இன்று கம்ப்யூட்டரை பயன்படுத்துபவர்களாக மாறிவிட்டார்கள். ஆனால், மனிதர்களது கல்வியறிவு வளர்ந்தளவிற்கு அவர்களது பண்பும் ஆளுமையும் வளர்ச்சியடையவில்லை. அதன் விளைவாகவே, இன்றைய மாணவர்கள் பலர் தங்கள் மதிப்பீடுகளைச் சிதறடித்து காட்டாற்று வெள்ளத்தில் அடித்துச் செல்லப்படும் துரும்பாக வாழ்ந்துகொண்டிருக்கின்றனர். அவர்களை பொறுப்புடையவர்களாக வளர்த்தெடுக்க வாழ்க்கைத்திறன் கல்வி தேவைப்படுகிறது. எனவேதான், இராமநாதபுரம் நகரில் பொருளாதாரத்தில் பின்தங்கிய, முதல்தலைமுறையாக கல்விபெறுகிற மாணவர்களுக்குக் கற்பித்து, கடந்த 15ஆண்டுகளாக தொடர்ந்து பத்தாம் வகுப்பு பொதுத்தேர்வில் 100 விழுக்காடு வெற்றியை பெற்றுக்கொண்டிருக்கும் எமது பள்ளியில், வாழ்க்கைத்திறன் கல்வியின் தேவையை உணர்ந்து 2010-11ஆம் கல்வியாண்டு முதல் தளிர்த்திறன் திட்டத்தைப் பயிற்றுவிக்கிறோம். ஆறு முதல் ஒன்பதாம் வகுப்பு வரையுள்ள ஒவ்வொரு வகுப்பிலும் வாரத்திற்கு இரண்டு பாடவேளைகளை மதிப்பீட்டுக் கல்விக்கென்று கால அட்டவணையில் ஒதுக்கி, தளிர்த்திறன் திட்டப் பாடங்களைப் பயிற்றுவித்து வருகிறோம். இதன் விளைவாக அவர்களிடம் பல்வேறு நடத்தை மாற்றங்கள் ஏற்பட்டு இருக்கின்றன. எடுத்துக்காட்டாக, 2016-17ஆம் கல்வியாண்டில் மாணவர்களிடம் ஏற்பட்டிருக்கும் நடத்தை மாற்றம் பற்றிய ஆய்வின் முடிவினை பின்வரும் வரைபடத்தில் காணலாம்:




மாறிவரும் காலச்சூழ்நிலையில் மாணவர்களைப் பொறுப்புள்ள மனிதர்களாக உருவாக்கும் ஆசிரியப்பணி மிகுந்த சவாலுக்குரியதாக மாறிவருகிறது என்பதை நாம் அறிவோம். அந்த சவாலை எளிதில் சமாளிக்க இந்த தளிர்த்திறன் திட்டம் உதவியாக இருக்கிறது. ஆதலால், அனைத்துப் பள்ளிகளிலும் இத்திட்டத்தை முறையாகச் செயல்படுத்த முயற்சிப்போம்! நாளைய சமூகச் சிற்பிகளைச் செதுக்குவோம்!! நலமான சமூகத்தை உருவாக்குவோம்!!!



**- அருட்சகோதரி ஸ். சகாயமேரி**
தலைமையாசிரியர்
புனித ஜோசப் மேல்நிலைப்பள்ளி
இராமநாதபுரம்
தமிழ்நாடு

## டிம் டிம் தாரா என்னும் ஊட்டச்சத்து!

டிம் டிம் தாரா திட்டம் எங்களது பள்ளியில் 2016 ஆகஸ்டு மாதம் முதல் கற்பிக்கப்படுகிறது. இத்திரைப்பாடங்களில் உள்ள செயற்பாடுகளையும் விளையாட்டுகளையும் மாணவர்கள் விரும்புகின்றனர்; அதனால் இப்பாடங்களைக் கற்கும்பொழுதெல்லாம் அவர்கள் மிகவும் உற்சாகமடைகின்றனர். இத்திரைப்பாடங்கள் திட்டமிட்டு முறையாக உருவாக்கப்பட்டு இருக்கின்றன. எனவே பிறரை மதித்தல், உற்றுக்கவனித்தல், பொருத்தமாக பேசுதல், உறவுகளைப் பேணுதல், ஒற்றுமையாக இருத்தல் ஆகியன உள்ளிட்ட பல்வேறு நல்ல பண்புகளை மாணவர்கள் எளிதாகக் கற்றுக்கொள்கின்றனர். பலவேளைகளில் நாம் மாணவர்களின் கல்வியில் கவனத்தைச் செலுத்தி, பண்புகளை கற்றுக்கொடுக்கத் தவறிவிடுகிறோம்; இதனால் அவர்கள் பெரும் உயர்கல்விகூட பொருளற்றதாகிவிடுகிறது. எனவேதான் டிம் டிம் தாரா மாணவர்களின் எதிர்காலத்தை வளப்படுத்தும் மிகநல்ல ஊட்டச்சத்து என நான் கருதுகிறேன்.



**- இராஜ்கமல்**
தலைமை ஆசிரியர்
வினோபாவே தொடக்கப்பள்ளி எண் 2
உதானா
சூரத் மாவட்டம்
குஜராத்

## முழுமையான வளர்ச்சிக்கு உதவுகிறது!

மராத்தியை பயிற்றுமொழியாகக்கொண்ட எங்களது பள்ளியில் வாழ்கைத்திறன் கல்வி டிம் டிம் தாரே திட்டத்தின் வழியாக இந்தியில் கற்பிக்கப்படுகிறது. இங்கு இத்திட்டம் தொடங்கப்பட்ட நாள் முதல் இன்று வரை மாணவர்கள் இதனை மிகவும் விரும்புகிறார்கள். ஏனென்றால் மாணவர்கள் விளையாட்டுப்போக்கில் பண்புகளைக் கற்கும் வகையில் இத்திட்டம் வடிவமைக்கப்பட்டு இருக்கிறது. மாணவர்களின் முழுமையான வளர்ச்சிக்கு இத்திட்டத்தின் திரைப்பாடங்கள் அனைத்தும் மிகவும் பயன்படுகின்றன. மாணவர்கள் தாம் கற்றவைகளை தம் நடத்தைகளோடு ஒப்பிட்டுத் திருத்திக்கொள்கிறார்கள். எடுத்துக்காட்டாக, காலமேலாண்மை, கவனித்துப் பழகுக, மற்றவர்களை மதிக்கப் பழகுக, தோற்றத்தைப் போற்றிப் பழகுக ஆகிய திரைப்பாடங்களைப் பார்த்த பின்னர் உரிய நேரத்தில் பள்ளிக்கு வருதல், வகுப்பறையில் கூர்ந்து கவனித்தல், மற்றவர்களுக்கு மரியாதை கொடுத்தல், பொருத்தமான உடைகளைத் தூய்மையாக அணிந்துவருதல் ஆகிய மாற்றங்கள் ஏற்பட்டு இருக்கின்றன. இந்த மாற்றங்களை டிம் டிம் தாரே திட்டம் செயற்படுத்தப்படும் 6, 7, 8ஆம் வகுப்பில் பயிலும் மாணவர்களில் 60 விழுக்காட்டினரிடம் காணமுடிகிறது.



**- ஹெமந்த்**
ஆசிரியர்
வினோபாவே தொடக்கப்பள்ளி எண் 2
உதானா
சூரத் மாவட்டம்
குஜராத்

## இடையூறுகளை எதிர்கொள்ளச் செய்கிறது!

டிம் டிம் தாரா திரைப்பாடங்களுக்கு மாணவர்களிடையே மிகவும் உற்சாகமான வரவேற்பு இருக்கிறது. பங்கேற்று நடித்தல், சேர்ந்து பாடுதல் ஆகியவற்றில் பங்கேற்க மிகவும் விரும்புகிறார்கள். கரும்பலகையில் எழுதிப்போட்டு நன்னடத்தைகளைக் கற்பிக்கும் முறையைவிட டிம் டிம் தாராவின் வழியாக கற்பிப்பது மிகவும் பயனுடையதாக இருக்கிறது. வாழ்வில் வரும் இடையூறுகளை எவ்வாறு எதிர்கொண்டு அவற்றிலிருந்து மீள்வது என்பதனை இப்பாடங்கள் மாணவர்களுக்குக் கற்றுத் தருகின்றன. இதனால் மாணவர்களிடையே எதனையும் உற்றுக்கவனிக்கும் பழக்கம் ஏற்பட்டிருக்கிறது.



**- ஸ்நேகா**
ஆசிரியர், சேத் தோகர்லால் சூரத்
மாநகராட்சி தொடக்கப்பள்ளி எண்.1
சூரத்
குஜராத்

## சுமையன்று; சுவை!

குறைந்தது இருபதாண்டுகளுக்கு முன்னர், பள்ளியில் வாரத்திற்கு இரண்டு பாடவேளைகளை நன்னெறிக்கல்விக்கென ஒதுக்கி ஆசிரியர்கள் நீதிக்கதைகளைக் கூறுவர். வீட்டில் பெற்றோரும் தாத்தாவும் பாட்டியும் கதைகள் கூறுவர். இவை மாணவர்களுக்கு வாழ்க்கைத்திறன்களைக் கற்றுக்கொடுத்தன. ஆனால் இன்று பள்ளியில் நன்னெறி வகுப்புகள் பெரும்பாலும் நடத்தப்படுவதில்லை. பெற்றோர்கள் தம் பிள்ளைகளை 'சொன்னதைச் சொல்லும் கிளிப்பிள்ளை'களாகவே வளர்க்க விரும்புகின்றனர். எனவே, மாணவர்களுக்கு தாமாகச் சிந்திப்பதற்கும் சிந்தித்ததை பேசுவதற்கும் வாய்ப்பு கிடைப்பதில்லை. இந்த நிலை மாற வேண்டும் என்று எண்ணிக்கொண்டு இருந்தபொழுது, அபராஜிதா அறக்கட்டளையின் தளிர்த்திறன் திட்டம் வாடிப்பட்டி ஒன்றியத்தில் உள்ள தொடக்கப்பள்ளிகளுக்கு 2012 ஆம் ஆண்டு அறிமுகப்படுத்தப்பட்டு, நான் பணியாற்றும் பள்ளியிலும் தொடங்கப்பட்டது. தொடக்கத்தில் இத்திட்டத்தைக் கூடுதல் சுமையென நினைத்தோம். ஆனால், நாளடைவில் மாணவர்களின் நடத்தையில் மாற்றங்களைப் பார்த்ததும் எங்களுக்கு உற்சாகம் பிறந்துள்ளது. எடுத்துக்காட்டாக, கருப்பு என்ற மாணவன் எப்பொழுதும் சொல்வதைக் கவனிக்காமல் படபடவென்று பொறுமையில்லாமல் இருப்பான். ஒரு பொருளை எடுத்து வரச்சொன்னால் வரும்போதே போட்டு உடைத்து விடுவான். அதனால் அவனிடம் பொருளை எடுத்து வரச் சொல்லவே பயமாக இருக்கும். இப்பொழுது தளிர்த்திறன் திட்டத்தில் அமைதியாகக் கவனித்தல் என்ற பாடத்தில் வரும் விளையாட்டை விளையாடியதிலிருந்து மற்றவர்கள் கூறுவதைக் கவனித்து பொறுமையுடன் செய்யத் தொடங்கியிருக்கிறான். மேலும், களிப்போடு கல்வி என்ற அடிப்படையில் தளிர்த்திறன் திட்டப் பாடங்கள் அமைந்துள்ளதால் மாணவர்களின் இடைநிற்றல் முற்றிலுமாகக் குறைந்துள்ளது. மாணவர்கள் விளையாட்டு முறையில் ஒழுக்கத்தையும் கல்வியையும் கற்றுக்கொண்டுள்ளனர்.



**- ஞா.ஆசீர்வாதம் பீட்டர்**
ஆசிரியர்
காந்திஜி தொடக்கப்பள்ளி
பொட்டுலுபட்டி
மதுரை மாவட்டம், தமிழ்நாடு

## சுழற்சங்கத்தின் சார்பாக தளிர்த்திறன் திட்ட காணொளி வழங்கல்



மதுரை மெட்ரோ சுழற்சங்கத்தினரோடு இணைந்து 2017 சனவரி 30ஆம் நாள் விராட்டிபத்திலுள்ள கே.வி.ஜி. வித்யாசாலா உயர்நிலைப்பள்ளியிலும் பிப்ரவரி 21ஆம் நாள் மதுரையிலுள்ள சி.எஸ்.ஐ. பசுமலை மேல்நிலைப்பள்ளி, மங்கையர்கரசி மேல்நிலைப்பள்ளி ஆகியவற்றிலும் தளிர்த்திறன் திட்டம் தொடங்கப்பட்டது. தளிர்த் திறன் திட்டக் காணொளிகளை மதுரை மெட்ரோ சுழற்சங்கத்தினர் முதலிரு பள்ளிகளின் தலைமையாசிரியர்களிடம் வழங்கினர்; சுழற்சங்க மாவட்டம்:3000ன் ஆளுநர் ம. முருகானந்தம் மங்கையர்கரசி மேல்நிலைப் பள்ளியில் வழங்கினார்.

## ஓராசிரியர் பள்ளியினருக்கு தளிர்த்திறன் திட்ட ஆசிரியர் பயிற்சி



"குழந்தைகளால் பள்ளிக்குச் செல்ல இயலவில்லையென்றால், ஏன் பள்ளியை குழந்தைகளிடம் கொண்டுசெல்லக்கூடாது?" என்னும் சிந்தனையின் அடிப்படையில் தொடக்கப்பள்ளி மாணவர்களுக்காக 615 ஓராசிரியர் பள்ளிகளை திருவள்ளூர், காஞ்சிபுரம், நாகபட்டினம் மாவட்டங்களில் சுவாமி விவேகானந்தர் ஊரக மேம்பாட்டுச் சங்கம் நடத்தி வருகிறது. இம்மாலை நேரப் பள்ளிகளில் பயிலும் மாணவர்களுக்கு வாழ்க்கைத் திறன் கல்வியை வரும் கல்வியாண்டு முதல் வழங்கும் நோக்கில் 512 ஆசிரியர்களுக்கு தளிர்த்திறன் திட்ட ஆசிரியர் பயிற்சி 2017 பிப்ரவரி 11, 18, மார்ச் 19ஆகிய நாள்களில் திருவள்ளூர் மாவட்டம் உளுந்தை என்னும் சிற்றூரில் அமைந்துள்ள அச்சங்கத்தின் பயிற்சி மையத்தில் நடைபெற்றது.

## குஜராத்தில் டிம் டிம் தாரா ஆசிரியர் பயிற்சிகள்

குஜராத் மாநிலத்தின் அகமாதபாத், வதோதரா, சூரத் ஆகிய மூன்று மாவட்டங்களில்



செயற்படுத்தப்படும் தளிர்த்திறன் திட்டம் தற்பொழுது பாருச், கட்ச் ஆகிய மாவட்டங்களுக்கு விரிவுபடுத்தப்பட்டு இருக்கிறது. அதனையொட்டி, பாருச் மாவட்டத்தில் 2017 சனவரி மாதத்தில் 150 பள்ளிகளைச் சேர்ந்த ஆசிரியர்களுக்கும் பிப்ரவரி மாதத்தில் 185 பள்ளிகளைச் சேர்ந்த ஆசிரியர்களுக்கும் டிம் டிம் தாரா ஆசிரியர் பயிற்சி அளிக்கப்பட்டது. கட்ச் மாவட்டம் பூஜ் நகருக்கு அருகிலுள்ள நிரோனா என்னும் சிற்றூரில் கல்வியாளர் திலிப் முலானியின் ஏற்பாட்டில் 2017 சனவரி மாதத்தில் 12 பள்ளிகளைச் சேர்ந்த 30 ஆசிரியர்களுக்கும், மாணவர்கள் பங்கேற்ற மாதிரி வகுப்புகளுடன், டிம் டிம் தாரா ஆசிரியர் பயிற்சி அளிக்கப்பட்டது

## டிம் டிம் தாரே திட்டத்தை
## செயற்படுத்திய பள்ளி முதல்வருக்குப் பாராட்டு



தளிர்த்திறன் திட்டத்தின் இந்தி வடிவமான "டிம் டிம் தாரே" முதன்முதலாக இராஸ்தான் மாநிலம் உதய்பூர் மாவட்டத்திலுள்ள கேர்வாரா என்னுமிடத்தில் அமைந்துள்ள சுவாமி விவேகானந்தர் அரசு மாதிரி மேல்நிலைப் பள்ளியில் 2015-16ஆம் கல்வியாண்டில் வெள்ளோட்டமாக கற்பிக்கப்பட்டது. அதற்கான முன்முயற்சியை அப்பள்ளியின் முதல்வர் தினேஷ்வியாஸ் மேற்கொண்டார். அவ்வெள்ளோட்டத்தின் முடிவில் மாணவர்கள், ஆசிரியர்கள், பெற்றோர்கள் ஆகியோரிடம் பெறப்பட்ட பின்னூட்டங்களின் அடிப்படையில் இத்திட்டம் இராஜஸ்தான் மாநிலத்தில் உள்ள 1340 ஆதர்ஸ் பள்ளிகளுக்கும் 71 மாதிரி பள்ளிகளுக்கும் விரிவாக்கம் செய்யப்பட்டது. இதனை அறிந்த அரியானா மாநில அரசு, தம் மாநில கல்வியலுவலர்களுக்கு இத்திட்டத்தைப் பற்றி எடுத்துரைக்க அவருக்கு அழைப்புவிடுத்தது. இங்ஙனம் டிம் டிம் தாரே திட்டத்திற்கு அறிமுகம் செய்து மாணவர்கள் பலரும் பயனடையக் காரணமாக இருந்ததைப் பாராட்டி, இராஜஸ்தான் அரசு 2017 சனவரி 26ஆம் நாள் நடைபெற்ற குடியரசு நாள் விழாவில் தினேஷ்வியாஸிற்கு பாராட்டுப்பட்டயம் வழங்கியது. அவருக்கு நமது பாராட்டுகளும் வாழ்த்துகளும் உரித்தாகுக.

# எதிரொலிகள்

தளிர்த்திறன் திட்டத்தின் தாக்கத்தை இந்திய வரைபடம் வழியாக அட்டைப்படத்தில் பார்க்க பிரமிப்பாக இருக்கிறது! எவ்வளவு வளர்ச்சி!! அபராஜிதா அறக்கட்டளையின் கல்விச்சேவையும் தாக்கமும் மேன்மேலும் வளர்ந்து இந்தியாவின் மேல் "ஹோலி" கொண்டாடட்டும்! வாழ்த்துகள்.

தமிழக பள்ளி மாணவர்களுக்கு தளிர்த்திறன் திட்டம் அழகுத்தமிழில் கொடுக்கும் வாழ்க்கைக் கல்வியின் சொற்களஞ்சியம் (Life Skills Vocabulary) அவர்கள் கூடவே தொடர்ந்து வளர்ந்து, பட்டறிவால் செம்மைப்பட்டு, உற்றதுணையாக நிற்கும். த.தி.தி. பள்ளி மாணவர்களுக்குக் கிடைத்த ஒரு கொடை; தமிழ் வளர்ச்சிக்கும் ஓர் அரிய தொண்டு. வளர்க அபராஜிதாவின் பணி!

***- முனைவர் ஆ. ஆயி***
*தலைவர், ஆகநல் பள்ளி, கொங்கணாபுரம்.*

தளிர்திறன் திட்டத்தின் உள்ளடக்கம் ஒவ்வொருவருக்கும் தேவையானது. இத்திட்டம் தனது வீச்சில் அடைந்திருக்கும் சிறப்பான வளர்ச்சியைக் கண்டு வியக்கிறேன். இந்நிலையை அடைவதற்காக அவ்வணியினர் மேற்கொண்டுள்ள முயற்சிகள் நன்கு பாராட்டத்தக்கவை. இந்த அணி "தேச உருவாக்கம்" என்னும் பெரும்பணிக்கு தனது பங்களிப்பை வழங்குகிறது என நான் கூறினால், அது உண்மைக்கு அப்பால் இருக்காது. இன்னும் நெடுந்தொலைவு செல்க!!

***- க. வரதன்***
முதன்மை இயக்குகை அலுவலர் - கலந்தாய்வு, தணிக்கை, பன்னாட்டில் இயங்குதல்
அபராஜிதா கார்ப்பரேட் சர்வீஸஸ் (பி) லிமிடெட், மதுரை.

அபராஜிதா அறக்கட்டளை தன்னுடைய கைகளை புதிய இடங்களை நோக்கி நீட்டியிருப்பது மகிழ்ச்சியை அளிக்கிறது. சமூக மாற்றத்திற்கு மிக முக்கிய காரணிகளாக இருப்பவர்கள் மாணவர்களே. அவர்களாலேயே இச்சமூகத்தை நற்சமூகமாக வளர்த்தெடுக்க முடியும். அதற்கான வழிகாட்டுதலைத் தொடர்ச்சியாக வழங்கிவரும் அபராஜிதாவுக்கு வாழ்த்துகளும் நன்றியும்.

***- மொ. பாண்டியராஜன்***
தாளாளர், சம்பக் மழலையர் மற்றும் தொடக்கப்பள்ளி, மதுரை.

தளிர்த்திறன் திட்டம் இந்தியா முழுவதும் பரவிவருவதை அறிய மகிழ்ச்சியும் பெருமிதமும் அடைகிறேன்.

***- வா. இராஜாராம்***
*காம்காஸ்ட், சென்னை.*

மிகவும் ஆன்மநிறைவளிக்கும் பணி. இப்பணி மேலும் தொடர வாழ்த்துகள், இத்திட்டத்தின் வீச்சிற்கும் வெற்றிக்கும் பாராட்டுகள்.

***- மருத்துவர் ஏ.வி. சாந்தி***
*சென்னை.*